1980 பிப்ரவரி 4]

(ஆ) இதை முடிக்கும் திட்டம் ஏதாவது இந்த அரசிடம் உண்டா ?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) மற்றும் (ஆ) : ரூ. 38,525 மதிப்பீட்டில் இப்பள்ளிக்கு மராமத்து பணிகள் மேற்கொள்ள ஒப்புதலளிக்கப்பட்டு பணி துவங்கப்பட்டு மேற்கூரை பிரிக்கப்பட்டது. இதற்கிடையில் 1977-ம் ஆண்டு புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பள்ளிகளின் வெள்ள நிவாரண கட்டிட பணிகளுக்காக இதற்கென ஒதுக்கப்பட்ட தொகை மாற்றப்பட்டு விட்டதால் இப்பள்ளியின் மராமத்து பணி தடைப்பட்டது. இப்பொழுது இப்பணி மீண்டும் துவங்கப்பட்டு வேலையும் முடிவடைந்து 1979, அக்டோபர், 26-ம் நாள் அன்று கட்டிடம் கல்வித்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

திண்டிவனத்தில் தொழிற்பயிற்சி நிலையம்.

*வினா எண். 29— திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புதியதாக திண்டிவனத்தில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது முதல் செயல்படும் ?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[முற்பகல் 9–30]

திரு. துரை முத்துசாமி : தலைவர் அவர்களே, அதுபோன்று திண்டிவனத்தில் இல்லை என்று அமைச்சர் செயலர் அவர்கள் சொன்னார்கள். தென் ஆற்காடு மாவட்டத்திலே வேறு எங்காவது இந்தத் திட்டம் இருக்கிறதா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்.): பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தென் ஆற்காடு மாவட்டத்தில் இரண்டு அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் உள்ளன. கடலூர் மற்றும் உளுந்தூர்பேட்டையில் அவை இருக்கின்றன. மேற்கொண்டு வேறு இடத்திலேயும் அமைப்பதற்கான உத்தேசம் தற்போது அரசிடம் இல்லை.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, ஒரு தொழிற் பயிற்சி நிலையம் அமைப்பதற்கு மாநில அரசுக்கு ஆகும் செலவு எவ்வளவு? அதற்கு மத்திய அரசு உதவித் தொகை வழங்கப் படுகிறதா என்பதை அமைச்சுச் செயலர் அவர்கள் அறிவிப்பார்களா?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே கேட்ட கேள்விக்கு விடை இருக்கின்றது. 250 இருக்கைகள் கொண்ட தொழிற் பயிற்சி நிலையத்தை ஆரம்பிப்பதற்கு மாநில அரசுக்கு 30 இலட்சத்திற்கும் மேற்பட்டு செலவாகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. இளங்கோவன்: பேரவைத் தலைவர் அவர்களே, புதிய தொழிற் பயிற்சி நிலையங்கள் அந்த மாவட்டத்தில் தொடங்க இயலாது என்று அமைச்சரின் பேரவைச் செயலர் அறிவித்தார். இருக்கின்ற பயிற்சி நிலையங்களிலே அதிகமான இடங்களை ஒதுக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, 1973–74, 1974–75, 1975–76 ஆகிய இந்த மூன்று ஆண்டுகளில் வேலை வாய்ப்பு அலுவகத்தின் பதிவேட்டின்படி தொழிற் பயிற்சி நியைங்களில் பயிற்சி பெற்ற கைவினைஞர்களின் எண்ணிக்கை ஏராளமாக இருந்தபடியால் முன்னாலே இருந்த 2,500 என்ற எண்ணிக்கை குறைக்கப்பட்டிருக்கிறது. அதுவே பூர்த்தி செய்யப்படவில்லை. அது பூர்த்தி செய்யப்பட்ட பிறகு உறுப்பினருடைய யோசனை. பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து 30, 31 கேள்வி இரண்டையும் ஒன்றாக எடுத்துக்கொள்ளலாமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: எடுத்துக் கொள்ளலாம்.